செய்தி வெளியீடு எண்: 615 நாள் : 04.12.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**
**சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மழையினால் தொற்று நோய் பரவாமல் இருக்க மேலும் 92 நடமாடும் வெள்ள நிவாரண மருத்துவ குழுக்கள்!**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் நேரில் பார்வைட்டு தேவையான மருத்துவ சிகிச்சைகள் மக்களுக்கு வழங்க மருத்துவர்களுக்கு அறிவுரை!**

****

தமிழ்நாட்டில் தற்பொழுது பெய்து வரும் வடகிழக்க பருவமழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் தொற்று நோய்கள் வராமலிருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இன்று முதல் 92 நடமாடும் வெள்ள நிவாரண மருத்துவ குழுக்கள் அனுப்பப்படவுள்ளது. இக்குழுக்கள் தமிழ்நாட்டின் உள்ள பிற மாவட்டங்களான மதுரை, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திண்டுக்கல் போன்ற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மருத்துவக் குழுவிலும் தலா ஒரு மருத்துவ அலுவலர், செவிலியர், மருந்தாளுநர் மற்றும் சுகாதார ஆய்வாளர் உட்பட மொத்தம் 4000க்கும் மேற்பட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆப., ஆகியோர் சென்னை ஒமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில் 92 நடமாடும் வெள்ள நிவாரண மருத்துவக் குழுக்களை பார்வையிட்டு மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொற்று நோய்களை தடுக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் மற்றும் சுகாதார பணிகளை செம்மையாக மேற்கொள்ள அறிவுரை வழங்கினார்கள்.

இந்த மருத்துவக் குழுக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு நோய்களுக்கு சிகிச்சை மற்றும் மருந்துகள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல் அந்தந்த பகுதிகளில் குடிநீரில் குளோரின் அளவு சரிபார்த்தல், பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை உறுதி செய்தல் மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்வர்.

இந்நிகழ்ச்சியின்போது பொது சுகாதாரம் மற்றம் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, கூடுதல் இயக்குநர் டாக்டர் வடிவேல், இணை இயக்கநர் சேகர் மற்றும் மாவட்டங்களில் இருந்து வந்திருந்து மருத்துவ அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**